**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.07/2023 இன் அ.வ.எண்.332/2015**

1) T.காமாட்சி சுந்தரம்
2) K.ராமசாமி
3) K.ரகு
4) P.ஜெயராமன்
5) N.மகேஸ்குமார் ... மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

/ எதிர் /

1) சேகர் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

2) விஸ்வநாதன்
3) லோகநாதன்
4) சிவசுப்பிரமணியம்
5) முத்துச்சாமி
6) நடராஜ் ... 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்

7) தேவராஜ்
8) சிவராஜ்
9) அன்பழகன் ... 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 04.10.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. Su.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.முரளி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 6ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கில் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக கட்சிசேர்க்க உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர்கள் இவ்வழக்கில் கட்சிசேர்க்கப்பட வேண்டிய நபர்கள் ஆவார்கள். அசல் வழக்கானது அருள்மிகு ஸ்ரீகாமாட்சி அம்மன், ஸ்ரீ மெய்யப்பன் திருக்கோவில் சம்பந்தமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கோவிலானது பன்னெடுங்காலமாக அகமுடையார் சமூகம் முக்கந்தர் குலத்திற்கு குலதெய்வக்கோவிலாகும். மேற்படி கோவிலுக்குரிய பட்டா கோவில் பெயரில் உள்ளது. மேற்படி கோவில் தனிப்பட்ட நபர்கள் பெயரில் இல்லை.

**2.2)** மேற்படி மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் மேற்படி கோயிலில் உள்ள தெய்வங்களை குலதெய்வமாக வழிபாடு செய்து வருகிறார்கள். இந்நிலையில், 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் கடந்த 1955ம் வருடம் இந்து அறநிலைத்துறை பேரில் வழக்கு தாக்கல் செய்து உத்திரவு பெற்றுள்ளதாக தவறாக நீதிமன்றத்தில் கூறியும், மேலும் அவர்களது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யும்பொழுது ஒரு சில சொத்துக்களை கோவிலின் பராமரிப்புக்கு எழுதிக்கொண்டும் அதன் அடிப்படையில் அகமுடையார் சமூகம் முக்கந்தர் குலத்திற்கான குலதெய்வக்கோவிலை தங்களது குடும்ப சொத்தாக மாற்ற பலவழிகளில் முயன்று வருகிறார்கள்.

**2.3)** மேலும், 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் மேற்படி கோவில் சம்பந்தமாக தவறான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். ஆகவே, மனுதாரர்களை மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்த்து மனுதாரர்களின் எதிர்வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தால் மட்டுமே இந்த வழக்கில் சரியாக தீர்வை காணஇயலும். எனவே, அவசியதரப்பினர்களான மனுதாரர்களை இவ்வழக்கில் கட்சிசேர்த்து உத்தரவிடகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுச்சொத்தானது 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கும் தாத்தாவான சுப்பைய தேவர் என்பருக்கு கடந்த 22.09.1945ம் தேதியிட்ட தனது சகோதரர் ராமசாமி தேவர் உடன் ஏற்படுத்திக்கொண்ட பாகசாசன பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்கண்ட பாகப்பத்திரத்தில் சி அட்டவணையாக குறிப்பிடப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மேற்கண்ட கிராமத்தில் உள்ள காமாட்சியம்மன், மெய்யம்மன் மற்றும் விநாயகர் கோவில்களை பராமரித்து வரவேண்டியது என கண்டுள்ளது. மேற்படி சுப்பையதேவரும், அவருடைய மக்களும் கடந்த 04.04.1959ம் தேதி செய்துகொண்ட பாகப்பத்திரத்தில் கோயில் பராமரிப்பிற்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் 'சி' அட்டவணையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 'சி' அட்டவணை சொத்துக்கள் தான் மனுசொத்துக்கள் ஆகும்.

**3.2)** மேற்படி கோவிலைப் பொறுத்து 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தாத்தா சுப்பையா தேவர் கடந்த 30.05.1955 அன்று இந்து சமய அறநிலைத்துறைக்கும் எதிராக அ.வ.எண்.42/1955 என்ற வழக்கு தொடர்ந்து, மேற்படி கோவிலுக்காக விடப்பட்ட பூமி வகையறா சொத்துக்கள் மற்றும் ஊரில்

உள்ள கோயில்கள் தனக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் உரிமையானது என்றும், இந்து சமய அறநிலைதுறைக்கோ மற்ற வாரிசுகளுக்கோ எந்த சம்பந்தமும் இல்லை என்றும், தன்னுடைய வாரிசுகளுக்கு மட்டுமே அதை வழிநடத்தி வருவதற்காகவும், ஒரு உத்தரவு பெற்று இதுநாள்வரை மேற்கண்ட உத்தரவு எந்தவித மாற்றமுமின்றி நிலுவையில் இருந்துவருகிறது. கோவை இந்து அறநிலைய துணை கமிசனர் அவர்களிடம் தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில், மேற்கண்டவாறு சுப்பைய தேவர் 1945ம் வருட பத்திரப்படி தன் வசம் இருந்த சொத்துகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தைக் கொண்டு கோயில்கள் புதுப்பித்ததால், அவருடைய வாரிசுகள் தவிர வேறு யாருக்கும் எந்தவித பாத்தியமும், உரிமையும் இல்லை என்று சுப்பைய தேவருக்கே தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாக உத்தரவு பெற்றுள்ளார்.

**3.3)** சுப்பையாதேவர் மேற்படி கோவிலை அவரது வழிவந்த வாரிசுகளை மட்டுமே நிர்வாகம் செய்ய அனுமதித்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளர். கடந்த 1959ம் தேதிய பாகசாசனப்படி சுப்பையா தேவர் அவரது மூன்று ஆண் வாரிசுகளான கன்னிமுத்து தேவர், சண்முக தேவர் மற்றும் காமாட்சி தேவர் ஆகியோர்கள் தலா ஒரு வருடம் முறை வைத்து மேற்படி கோயில்களை பராமரித்து நிர்வாகம் செய்து வரவேண்டும். மேற்படி ஆவணத்திலேயே சுப்பையா தேவர் தனது பெண் வாரிசுகளை மேற்படி கோயில்களில் நிர்வாகப் பொறுப்பில் சேர்க்கவில்லை.

**3.4)** சுப்பையாதேவரின் மகன் கன்னிமுத்து தேவருக்கு 1ம் எதிர்மனுதாரரும், ராஜு என்பவரும் வாரிசுகளாவர். சண்முக தேவருக்கு 7 முதல் 9 எதிர்மனுதாரர்களே வாரிசுகள். சுப்பையதேவரின் மற்றொரு மகனும், 1ம் எதிர்மனுதாரரின் சித்தப்பாவான காமாட்சி தேவருக்கு யாதொரு வாரிசுகளும் இல்லை. அவரது மறைவுக்கு பிறகு 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான

கன்னிமுத்து தேவர் என்பவரே அவரது ஒருவருட கால நிர்வாக பொறுப்பையும் சேர்த்து கவனித்து வந்தார். அந்தவகையில் 1ம் எதிர்மனுதாரருக்கு இரண்டு வருட கால பராமரிப்பும், நிர்வாக பொறுப்பும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ஒரு வருட கால நிர்வாக பொறுப்பும் வந்துள்ளது. மேலும், கன்னிமுத்துதேவரின் மற்றொரு வாரிசான ராஜு என்பவரின் உடல்நிலை காரணமாகவும், வெளியூரில் இருப்பதாலும் அவருக்கு பதிலாக 1ம் எதிர்மனுதாரரை நிர்வாகம் செய்துகொள்ள அனுமதித்துள்ளார்கள்.

**3.5)** மேலும், கோவிலில் சாமி தரிசனம் செய்ய வேண்டாம் என்றோ, மனுதாரர்களை வரவேண்டாம் என்றோ எந்த விதத்திலும் மேற்படி 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தடுக்கவில்லை. ஆனால் கோவில் நிர்வாகத்தில் எவ்வித உரிமையும் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்கவில்லை. மேலும், மேற்படி சுப்பையா தேவர் அவரது உடன்பிறந்த அண்ணன் ராமசாமி தேவரின் வாரிசுகளுக்கு மேற்படி கோயிலில் நிர்வகத்தை நடத்த எந்த அனுமதியும், பாத்தியதையும் இல்லை என ஏற்கனவே கடந்த 1955 ஆண்டு மே மாதம் 30ம் தேதி ஒரு நீதிமன்ற உத்தரவை பெற்றுள்ளார். இந்நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் முறையில் இடையூறு செய்து வந்த காரணத்தினால் வழக்கு அவர்கள் மீது மட்டும் தாககல் செய்திருந்தார். அதன்பின்னிட்டு 7 முதுல் 9 எதிர்மனுதாரர்கள் கட்சிசேர்க்கப்பட்டுள்ளார்கள். மேலும், கோவில் நிர்வகாத்தில் 2 முதல் 6 எதிர்மனதாரர்கள் இடையூறு செய்த காரணத்தினால் இ.ம.எண்.6/2023 என்ற எண்ணில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அகமுடையார் முக்கந்தர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தை கொண்டு, இவ்வழக்கில் கட்சி சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) <u>7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>

மனுச்சொத்தானது 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கும் தாத்தாவான சுப்பைய தேவர் என்பருக்கு கடந்த 22.09.1945ம் தேதியிட்ட தனது சகோதரர் ராமசாமி தேவர் உடன் ஏற்படுத்திக்கொண்ட பாகசாசன பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்கண்ட பாகப்பத்திரத்தில் சி அட்டவணையாக குறிப்பிடப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மேற்கண்ட கிராமத்தில் உள்ள காமாட்சியம்மன், மெய்யம்மன் மற்றும் விநாயகர் கோவில்களை பராமரித்து வரவேண்டியது என கண்டுள்ளது. மேற்படி சுப்பையதேவரும், அவருடைய மக்களும் கடந்த 04.04.1959ம் தேதி செய்துகொண்ட பாகப்பத்திரத்தில் கோயில் பராமரிப்பிற்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் 'சி' அட்டவணையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 'சி' அட்டவணை சொத்துக்கள் தான் மனுசொத்துக்கள் ஆகும்.

**4.2)** மேற்படி கோவிலைப் பொறுத்து 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தாத்தா சுப்பையா தேவர் கடந்த 30.05.1955 அன்று இந்து சமய அறநிலைத்துறைக்கும் எதிராக அ.வ.எண்.42/1955 என்ற வழக்கு தொடர்ந்து, மேற்படி கோவிலுக்காக விடப்பட்ட பூமி வகையறா சொத்துக்கள் மற்றும் ஊரில் உள்ள கோயில்கள் தனக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் உரிமையானது என்றும், இந்து சமய அறநிலைதுறைக்கோ மற்ற வாரிசுகளுக்கோ எந்த சம்பந்தமும் இல்லை என்றும், தன்னுடைய வாரிசுகளுக்கு மட்டுமே அதை வழிநடத்தி வருவதற்காகவும், ஒரு உத்தரவு பெற்று இதுநாள்வரை மேற்கண்ட உத்தரவு எந்தவித மாற்றமுமின்றி நிலுவையில் இருந்துவருகிறது. கோவை இந்து அறநிலைய துணை கமிசனர் அவர்களிடம் தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில், மேற்கண்டவாறு சுப்பைய தேவர் 1945ம் வருட பத்திரப்படி தன் வசம்

இருந்த சொத்துகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தைக் கொண்டு கோயில்கள் புதுப்பித்ததால், அவருடைய வாரிசுகள் தவிர வேறு யாருக்கும் எந்தவித பாத்தியமும், உரிமையும் இல்லை என்று சுப்பைய தேவருக்கே தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாக உத்தரவு பெற்றுள்ளார்.

**4.3)** சுப்பையாதேவர் மேற்படி கோவிலை நிர்வகிக்க அவரது வழிவந்த வாரிசுகளை மட்டுமே நிர்வாகம் செய்ய அனுமதித்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளர். கடந்த 1959ம் தேதிய பாகசாசனப்படி சுப்பையா தேவர் அவரது மூன்று ஆண் வாரிசுகளான கன்னிமுத்து தேவர், சண்முக தேவர் மற்றும் காமாட்சி தேவர் ஆகியோர்கள் தலா ஒரு வருடம் முறை வைத்து மேற்படி கோயில்களை பராமரித்து நிர்வாகம் செய்து வரவேண்டும். மேற்படி ஆவணத்திலேயே சுப்பையா தேவர் தனது பெண் வாரிசுகளை மேற்படி கோயில்களில் நிர்வாகப் பொறுப்பில் சேர்க்கவில்லை.

**4.4)** சுப்பையாதேவரின் மகன் கன்னிமுத்து தேவருக்கு 1ம் எதிர்மனுதாரரும், ராஜு என்பவரும் வாரிசுகளாவர். சண்முக தேவருக்கு 7 முதல் 9 எதிர்மனுதாரர்களே வாரிசுகள். சுப்பையதேவரின் மற்றொரு மகனும், 1ம் எதிர்மனுதாரரின் சித்தப்பாவான காமாட்சி தேவருக்கு யாதொரு வாரிசுகளும் இல்லை. அவரது மறைவுக்கு பிறகு 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான கன்னிமுத்து தேவர் என்பவரே அவரது ஒருவருட கால நிர்வாக பொறுப்பையும் சேர்த்து கவனித்து வந்தார். அந்தவகையில் 1ம் எதிர்மனுதாரருக்கு இரண்டு வருட கால பராமரிப்பும், நிர்வாக பொறுப்பும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ஒரு வருட கால நிர்வாக பொறுப்பும் வந்துள்ளது. மேலும், கன்னிமுத்துதேவரின் மற்றொரு வாரிசான ராஜு என்பவரின் உடல்நிலை காரணமாகவும், வெளியூரில் இருப்பதாலும் அவருக்கு பதிலாக 1ம் எதிர்மனுதாரரை நிர்வாகம் செய்துகொள்ள அனுமதித்துள்ளார்கள்.

**4.5)** மேலும், கோவிலில் சாமி தரிசனம் செய்ய வேண்டாம் என்றோ, மனுதாரர்களை வரவேண்டாம் என்றோ எந்த விதத்திலும் மேற்படி 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தடுக்கவில்லை. ஆனால் கோவில் நிர்வாகத்தில் எவ்வித உரிமையும் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்கவில்லை. மேலும், மேற்படி சுப்பையா தேவர் அவரது உடன்பிறந்த அண்ணன் ராமசாமி தேவரின் வாரிசுகளுக்கு மேற்படி கோயிலில் நிர்வகத்தை நடத்த எந்த அனுமதியும், பாத்தியதையும் இல்லை என ஏற்கனவே கடந்த 1955 ஆண்டு மே மாதம் 30ம் தேதி ஒரு நீதிமன்ற உத்தரவை பெற்றுள்ளார். இந்நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் முறையில் இடையூறு செய்து வந்த காரணத்தினால் வழக்கு அவர்கள் மீது மட்டும் தாககல் செய்திருந்தார். அதன்பின்னிட்டு 7 முதுல் 9 எதிர்மனுதாரர்கள் கட்சிசேர்க்கப்பட்டுள்ளார்கள். மேலும், கோவில் நிர்வகாத்தில் 2 முதல் 6 எதிர்மனதாரர்கள் இடையூறு செய்த காரணத்தினால் இ.ம.எண்.6/2023 என்ற எண்ணில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அகமுடையார் முக்கந்தர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தை கொண்டு, இவ்வழக்கில் கட்சி சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**5)** 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை எதுவும் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**6)** மனுதாரர்கள் தங்களது வாதத்திற்கு ஆதரவாக *AIR 1998 RAJASTHAN 125* என்ற முன்தீர்ப்பு நெறியை மேற்கோள் காட்டியுள்ளார்கள்.

**7)** 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள் தங்களது வாதத்திற்கு ஆதரவாக கீழ்கண்ட முன்தீர்ப்பு நெறிகளை மேற்கோள் காட்டியுள்ளார்கள்:–

*1) Mumbai International Airport Pvt. Ltd Vs Regency Convention centre & hotels Pvt. Ltd. & ors in Supreme court*

*2) D.Vedanayagam Vs. Raja and other in Madras High Court*

**8)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**9)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**10)** **<u>பிரச்சினை</u>** :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், வழக்கு சொத்து மற்றும் அதில் உள்ள காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில் ஆகியவை வாதியின் பாட்டனார் சுப்பையாதேவர் மற்றும் அவரது சகோதரர் ராமசாமிதேவர் ஆகியோர் செய்துகொண்ட கடந்த 22.09.1945 தேதியிட்ட பாகப்பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்துகளாகும் என்று 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையில் கூறப்பட்டு அதன்அடிப்படையில், பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்குள் நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு வந்தநிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் வழக்கு சொத்தில் உள்ள கோவில் தெய்வங்களை குலதெய்வமாக வழிபாடு செய்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில், 1, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் கடந்த 1955ம் வருடம் இந்து அறநிலைத்துறை பேரில் வழக்கு தாக்கல் செய்து உத்திரவு பெற்றுள்ளதாக

தவறாக நீதிமன்றத்தில் கூறியும், மேலும் அவர்களது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யும்பொழுது ஒரு சில சொத்துக்களை கோவிலின் பராமரிப்புக்கு எழுதிக்கொண்டும் அதன் அடிப்படையில் அகமுடையார் சமூகம் முக்கந்தர் குலத்திற்கான குலதெய்வக்கோவிலை தங்களது குடும்ப சொத்தாக மாற்ற பலவழிகளில் முயன்று வருகிறார்கள் என்றும் மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**12)** 1ம் எதிர்மனுதாரர்/வாதி, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்து மற்றும் அதில் உள்ள கோவில் தங்களது பாட்டனார் சுப்பையா தேவருக்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்டது என்று வாதம் வைத்து வழக்கு சொத்தை பொறுத்து 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர். இந்நிலையில், மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் தங்களது முன்னோர்களும் வழக்கு சொத்தில் உள்ள கோவில் தெய்வங்களை குலதெய்வமாக வழிபாடு செய்து வருகிறார்கள் என்றும், வழக்கு சொத்தில் உள்ள கோவில்கள் அகமுடையார் சமூகம் முக்கந்தர் குலத்திற்கான குலதெய்வ கோவில் என்று வழக்குசொத்தில் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கான உரிமை மூலத்தையே மறுத்துள்ளார்கள். ஆகவே, இவ்வழக்கில் கண்ட பிரச்சனையை முழுமையாக முடிவு செய்ய மனுதாரர்கள் அவசியதரப்பினர்கள் என்றும், அவர்கள் இன்றி இவ்வழக்கை முழுமையாக முடிவு செய்ய முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (16.10.2023) அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.10.16 20:33:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.10.16 20:33:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------------------------------

**<u>அசல் ஆணையுரை</u>**

இ.ம.எண்.04/2023 இன் அ.வ.எண்.332/2015

நாள் : 16.10.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

-----------------------------------------------------------